தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | ஆகஸ்ட் 2023 | கனி 9




றிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்




MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 44
தலைப்பு : மரியாள் – Mary
வேத வாசிப்பு : அப்போஸ்தலர் 1:1-14



1. கன்னியாகிய மரியாள் - லூக்கா 1:27
2. பயப்படாதே தேவனிடத்தில் - லூக்கா 1:30
3. அப்போஸ்தலர்களோடு ஜெபத்தில் - அப்போஸ்தலர் 1:14


மாத இதழுக்கான
சந்தா செலுத்த மூன்று வழிகள்

GPAY & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

**Our TV Program: All Days of the Week**

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Friday & Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட். பெட்டி சோட்.
மற்றும்
வேதபாடம். வாலிபர் பகுதி. பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி. வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்


THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 ஆகஸ்ட் – 2023 கனி – 9


ஆசிரியருரை

## எதற்காக வேதாகமம் கொடுக்கப்பட்டது?
## For What was the Bible Given?



பரிசுத்த வேதாகமம் எதற்காக கொடுக்கப்பட்டது என்பதை குறித்து அநேகர் அறியாமல் இருக்கிறார்கள். பலர் பலவிதமான கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். சங்கீதம் 78-ல் வேதாகமம் கொடுக்கப்பட்ட நோக்கத்தை நாம் தெரிந்துகொள்ளுகிறோம். "அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்" என சங்கீதம் 78:5-ல் படிக்கிறோம். தேவன் இஸ்ரவேலிலே முதலாவது வேதத்தை ஸ்தாபித்தார் அல்லது கொடுத்தார். அதற்கு முன்பாக தேவன் முற்பிதாக்களோடு நேரடியாக தம்முடைய வார்த்தைகள் மூலம் பேசிக்கொண்டுவந்தார். அப்பொழுது அவர்களுக்கு வேதம் இல்லை. சீனாய் மலையில் மோசே மூலமாக பத்துக்கட்டளைகளைக் கொடுத்தார். தம்முடைய ஜனங்கள் நீதி நியாயங்களில் நடக்கவும் வருங்கால சந்ததியாகிய தம்முடைய பிள்ளைகளுக்கு அவைகளை அறிவிக்கும்படியாகவும் அவர்கள் அதன்படி நடக்கும்படியாகவும் வேதாகமம் கொடுக்கப்பட்டது. "இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்" எனக் காண்கிறோம் (சங்.78:6). இஸ்ரவேலின் சந்ததியார் அதை அறிந்துகொண்டு அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லவேண்டும் என்ற கட்டளையிருந்தது. இஸ்ரவேலில் அநேகர் கர்த்தரையும் கர்த்தருடைய கட்டளைகளையும் அதன் மகத்துவங்களையும் அறியாதுபோய்விட்டார்கள். ஆகையால் அவர்களுடைய பிள்ளைகளாவது தேவனுடைய வேதாகமத்தை சரியாக அறிந்துகொள்ளவேண்டுமென தேவன் விரும்பினார்.

ஆதலால், "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப்பேசி" என உபாகமம் 6:7-ல் சொல்லப்பட்டிருந்தது. அநேகர் பிள்ளைகளுக்கு வேதாகமத்தை கற்றுக்கொடுக்க தவறிவிடுகின்றனர். மேற்கண்ட

வசனத்தின்படியாக வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோது, வழியில் நடக்கிறபோது, படுத்துக்கொள்ளுகிறபோது, எழுந்திருக்கிறபோது வேதாகமத்தைக்குறித்தும் அதிலுள்ளவைகளைக்குறித்தும் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்க தவறிவிடுகின்றனர். பிள்ளைகளுக்கு நல்ல உலக கல்வியைக்கொடுக்கும் படியாகவே பெற்றோர்கள் விரும்புகிறார்கள். தங்களுடைய பிள்ளைகள் வளர்ந்து சிறப்பான உத்தியோகத்தில் இருக்கவேண்டுமென ஆசைப்படுகின்றனர். நல்லதுதான், அதேவேளையில் நம்மை உண்டாக்கின தேவன் நமக்குக் கொடுத்த கட்டளைகளையும் உபதேசங்களையும் அவர்கள் அறிந்துகொண்டு அவைகளில் நிலைத்திருந்து தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றவேண்டுமென ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கவேண்டுமல்லவா? ஒவ்வொருவரும் தங்களுடைய பிள்ளைகளுக்கு முதலாவது ஒரு வேதாகமத்தை வாங்கிக் கொடுக்கவேண்டும். தங்களுடைய பிள்ளைகள் அழகாயிருக்கவேண்டுமென விரும்பி பல பொருட்களை வாங்கிக்கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு பரிசுத்தவேதாகமத்தை வாங்கிக்கொடுத்து அதை தினமும் படிக்கவைக்கவேண்டும். சில பெற்றோர்கள் பிள்ளைகள் பெரிய பெரிய உத்தியோகத்திற்கு வரவேண்டுமென விரும்புகின்றனர். பதவி பட்டங்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாக போய்விடும் என்பதை அறிந்தும் அவர்கள் அந்தவிதமான வேலைகளையே அதிகமாக நாடுகிறார்கள்.

அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும்போது; "பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்கிறார் (2யோவா.4). பிள்ளைகள் சத்தியத்திலே நடப்பதே நமக்கு சந்தோஷம். ஒவ்வொரு பெற்றோருக்கும் அது பெருமையைக் கொண்டுவரும். பிள்ளைகள் உதாரித்தனமாகவும் அல்லது மற்றவர்களோடு சண்டையிடுகிறவனாகவும், திருடுகிறவனாகவும் இருந்தால் அவனைக்குறித்து நீங்கள் கேள்விப்படும்போது உங்களுடைய மனது சந்தோஷம் கொள்ளுமா? வேதனையடையுமல்லவா? இப்படிப்பட்ட வேதனையிலிருந்து விடுபட உங்களுடைய பிள்ளையை சத்தியத்திலே நடக்கும்படியாக பயிற்றுவியுங்கள். ஏலியைக்குறித்து அறிவீர்கள் அவன் தன் பிள்ளைகளை சரியான விதத்தில் வளர்க்கத்தவறிவிட்டான். "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" (1சாமு.2;12). இந்தவிதமாக அநேக குடும்பங்களில் பிள்ளைகள் கர்த்தரை அறியாதவர்களாகவே போய்விடுகிறார்கள். தகப்பன் சபைபோதகனாயிருப்பதால் பிள்ளைகள் வேதாகமத்தில் வல்லவர்களாயிருப்பார்கள் என்று நாம் நம்பிவிடமுடியாது. ஏனெனில்; அவர்களுக்கு வேதாகமத்தைக்குறித்த போதனைகள் படுக்கும் போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும்போதும், சாப்பிடும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும் நேரம்கிடைக்கும்போதெல்லாம் அவைகளைக்குறித்துப் அந்த பெற்றோர் பேசியிருக்கும்போது அந்த அறிவு அவர்களுக்கு கிடைக்கும். அவர்கள் கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொண்டு சாட்சியுள்ளவர்களாக வாழமுடியும். நாம் பிள்ளையானவன் நடக்கவேண்டிய விதத்திலே அவனை நடத்தவேண்டும். அப்பொழுது முதிர்வயதிலும் அவைகளைவிட்டுவிடாதிருப்பான். அன்பான சகோதரனே

சகோதரியே பரிசுத்தவேத வசனங்களை உன்பிள்ளைகளுக்கு கருத்தாய்போதிக்கும்படியான கட்டளை தேவன் உனக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து அவைகளை உன் பிள்ளைகளுக்கு போதிக்கும்படியாக ஆயத்தப்படு. அப்பொழுது உன் குடும்பத்திலுள்ளவர்கள் கர்த்தரை அறியும் அறிவை அடைவார்கள்.

தேவன் மேல் நம்பிக்கை வைக்கும்படியாக நாம் அவர்களை பயிற்றுவிக்கவேண்டும். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அவர்கள் அன்பு வைத்து வீணராய்போய்விடாதிருக்க நாம் அவர்களை கர்த்தருடைய சமூகத்துக்கு நேராக வழிநடத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். "தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்" என சங்.78:7-ல் படிக்கிறோம். வாலிபர்கள் தங்களுடைய நம்பிக்கையை அழிந்துபோகும் பொருட்கள்மீது வைத்து சிற்றின்பத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். ஜீவனுள்ள தேவனிடத்தில் நம்பிக்கை வைக்கும்போது அவர்களுடைய நம்பிக்கையை கர்த்தர் ஆசீர்வதித்து அவர்களுக்கு கேடகமாயிருப்பார். சங்கீதக்காரன் சொல்லும்போது "கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" என்று சொல்லுகிறான். ஆம், சத்தியத்தை உட்கொள்ளும்போது காலமெல்லாம் அது நம்மை காக்கும். அநேகர் தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லி சத்தியத்திற்குவிரோதமாக நடக்கிறார்கள். வசனம் சொல்லுகிறது; "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாகும்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவா.5:3). யேசுதாஸ் என்று பெயர் வைத்து ஒருவர் முள்வேலிகளை திருடிக்கொண்டு இருந்திருக்கிறார். ஒருநாளில் அவனை எல்லோரும் கையும் களவுமாக பிடித்து அந்த முள்வேலிகளை அவனுடைய தலையில் வைத்து இப்படித்தான் உங்கள் ஆண்டவருக்கும் முள்முடியை சூட்டினார்கள் என்று சொல்லி அவனை ஏளனம்பண்ணினார்கள். அவன் பெயர் மட்டும் வைத்துக்கொண்டு செய்த வேலைகளைப் பார்த்தீர்களா? இப்படி பெயர் கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு கற்பனைகளைக் கைக்கொண்டு நடவாதவர்களாயிருந்தால் நாமும் பொய்யர்களாகவும், தேவனுடைய நாமத்திற்கு மகிமைக்குறைச்சலை ஏற்படுத்துகிறவர்களாகவும் இருப்போம். நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாகும்.

யோசபாத் என்ற ராஜா தேவனுடைய கற்பனைகளின்படி நடந்தான் என 2நாளா.17:3,4 வசனங்களில் படிக்கிறோம். "கர்த்தர் யோசாபத்தோடிருந்தார்; அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன்நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொண்டான்" என காண்கிறோம். அநேக ராஜாக்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் பாகால்களைத்தேடி மோசம்போனார்கள். ஆனால் யோசபாத் ராஜா தன் தகப்பனாகிய தாவீது வழிகளில் நடந்து தேவனைத் தேடினான். இவனோ இஸ்ரவேலரைப்போல முரட்டாம் பண்ணாமல் கற்பனைகளைக் கைக் கொண்டான். தம்முடைய வேதத்தின்படி ஒவ்வொருவரும் நடக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். அதற்காக வேதாகமம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், "இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப்பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார்" (சங்.78:8). முற்பிதாக்களைப்போல வரக்கூடிய சந்ததி போய்விடாதிருக்க வேதாகமத்தை கொடுத்தார். அவைகளின்படி நடந்து அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக கட்டளைகளையும் கற்பனைகளையும் எழுதிக்கொடுத்தார் என அறிகிறோம். இஸ்ரவேலர் முரட்டாட்டமுள்ள சந்ததியாகவும் கலகமுள்ள சந்ததியாகவும் இருந்தனர். இவர்களைப்போல பின் சந்ததியும் கெட்டுப்போய் விடக்கூடாது என்பதற்காக வேதாகமத்தைக் கொடுத்தார். "அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்கு பொல்லாப் பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப்போட்டார்கள்" (2இரா.17:17).

இன்றைக்கும் இந்தவிதமான பழக்கங்கள் இருக்கிறது. தீமிதிக்கப்பண்ணுகிறதினால் பக்திமான்களாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். அவைகள் வீணானவைகள் என்று நாம் பார்க்கிறோம். இவைகள் கர்த்தருக்கு விரோதமான காரியங்கள். இவைகளைச் செய்கிறவர்கள் தவறு செய்து விட்டு எதிலும் சத்தியம்பண்ண துணிந்து நிற்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் தவறிலிருந்து மனந்திரும்பவேண்டுமென தேவன் விரும்புகிறார். இவர்களோடு போராடி வந்த மோசேயைக் கர்த்தர் பார்த்து; "இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்" என்றார் (யாத்.32:9). இப்படிப்பட்ட வணங்காக் கழுத்துள்ள ஜனங்களுக்காக மோசே ஜெபித்தார். ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள் என்றார். இப்படி தேவனுக்கு விரோதமாக ஈடுபட்டு கர்த்தருக்கு எரிச்சலை உண்டுபண்ணினார்கள். பின்சந்தியார் இவ்விதமாக போய்விடாதிருக்க அவர்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்கும்படியாக வேதாகமத்தை கர்த்தர் கொடுத்தார் எனக் காண்கிறோம்

**வேதவாக்கியங்களெல்லாம் எதினாலே அருளப்பட்டிருக்கிறது?**

"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ.3:16,17). இது சாதாரண மனிதனுடைய ஞானத்தினாலும் புத்தியினாலும், எழுதப்பட்டது அல்ல. தேவ மனிதர்கள் தேவனுடைய ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள். அவர்கள் தங்களுடைய சுயகருத்துக்களையோ போதனைகளையோ இதில் எழுதவில்லை. தேவன் என்ன சொன்னாரோ அவைகளையே அவர்கள் அவருடைய ஆவியின் ஏவுதலினாலே எழுதினார்கள். பலர் பலவிதமான இடங்களிலிருந்து எழுதியிருக் கிறார்கள். அவைகளை நாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஒத்தவைகளாயிருக்கிறது. ஆகையால் இது தேவனுடைய ஆவியின்படியாக எழுதப்பட்டுள்ளது என அறிகிறோம். நீங்கள் வேதாகமத்தின் உபதேசங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



# பாவம் நிறைந்த உரையாடல்
## Sinful Speech
*-J.C.Choate*

**– சென்ற வாரஇதழின் தொடர்ச்சி**

**வே**தவாக்கியத்தில், நம்முடைய உரையாடலை கவனிக்கும்படி நாம் போதிக்கப்படுகிறோம்: "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரம்மேறினதாயுமிருப்பதாக" (கொலோ.4:6). இதைக் கவனியுங்கள்: "நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (தீத்.2:7,8).

யாக்கோபு, "ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்; ..." (யாக்.1:19) என்கிறான். மறுபடியும் "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்" (யாக்.4:11) என்று சொல்லுகிறான்.

அப்போஸ்தலனாகிய பேதுரு "ஜீவனை விரும்பி நல்ல நாட்களை காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்" (1பேது.3:10,11) என்று நமக்கு நினைப்பூட்டுகிறான். நீங்கள் சிலவற்றைக் கேள்விப்படும்போது, உங்களை நீங்களே சில கேள்விகள் கேட்டுக்கொள்ளவேண்டும்:

1. இது உண்மையா? நிச்சயமாக நீங்கள் தவறான தகவல்களை அனுப்பவிரும்பவில்லை.
2. நான் ஏன் இந்தத் தகவல்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்? இந்த தகவல்களைப் பகிர்ந்து கொள்வது தகுமா? அல்லது நான் சிலரைக் குறித்து சில தவறானவற்றை சொல்லுவதற்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாக எண்ணி இதைச் செய்கிறேனா? இந்த நபருக்கும் தேவனுக்கும் முன்பாக என் இருதயம் சரியானதாக இருக்கிறதா?

3. இத்தகவலுக்கான ஆதாரம் என்ன? இது ஒரு நண்பனிடமிருந்து, வானொலியிலிருந்து, செய்தித்தாளிடமிருந்து வந்ததா அல்லது என்ன? அத்தகைய ஆதாரத்தை உண்மைகளுக்காக நான் நம்ப முடியும் என உறுதியாயிருக்க முடியுமா?
4. அறிக்கையின் இயல்பு என்ன? அது துக்கமானதாக அல்லது மகிழ்ச்சியானதா? அது தவறானதா அல்லது நன்மையானதா? அது சிலரை வேதனைப்படுத்துமா அல்லது உதவுமா?
5. தகவலை என்னிடம் வைத்துக்கொள்வது நல்லது அல்லவா? சிலரின் நலனுக்காக அனுப்பப்பட வேண்டிய எந்த தகவலையும் நான் மறைக்க விரும்பவில்லை, ஆனால் இது வெறும் வதந்திகள், ஓயாத பேச்சு, பரியாசம் செய்யும் நாவு யாருக்கும் உதவாது என்றால், நான் அதை என்னுடன் நிறுத்த வேண்டும்.

ஆம், நம்முடைய நாவின் பயன்பாட்டைக் குறித்து நாம் நினைக்கும் அநேகக் காரியங்கள் இதில் உள்ளடங்கியுள்ளது. இதில் ஒரு சில காரியங்களை மட்டும் குறிப்பிவதற்கு உண்மை மற்றும் பொய்யைப் பற்றிய விஷயங்கள், இதயத்திலுள்ள நோக்கங்கள், தேவையற்ற பிரச்சனைகளை உருவாக்கும் கதைகளை அல்லது உண்மைகளைச் சொல்லுதல் போன்றவைகள் காணப்படுகின்றன. நாம் நம்முடைய நாவினை நம்மை நாமே வேதனைப்படுத்தவோ அல்லது மற்றவர்களை வேதனைப்படுத்தவோ பயன்படுத்தக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய பேச்சு நம்மைக் காட்டிக்கொடுத்துவிடும்.

நாம் சொல்லும் விஷயங்களைக் கேட்பதன் மூலம் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்வதற்கு அதிக நேரம் எடுக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன் நம்முடைய இருதயங்களை அறிகிறார் மேலும் நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவர் நம்மைப் பொறுப்பாக்குவார். மேலும் நம் மனதில் தோன்றும் ஒவ்வொரு நினைவையுங்கூட தேவன் அறிகிறார். "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்" (மத்.12:36,37).

உண்மையாகவே, நாவைக் கட்டுப்படுத்த ஒரே ஒரு வழி இருக்கிறது, அது நாவைக் கீழ்ப்படுத்தும்படிக்கு உதவிக்காக கர்த்தரிடம் திரும்புவதாகும். இருந்தாலும்கூட நாவை நழுவ விடுவதும், சொல்லக்கூடாததைச் சொல்லுவதும் மிகவும் எளிது என்பதால் இது ஒரு சவாலாக இருக்கும். கவனமாக இருங்கள்.

**"வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து" – நீதி.4:24**

பெண்கள் பகுதி

## ஆராதனைக்கு செல்வது மிகச்சிரமமாயிருக்கிறது

## Going To Worship Is Too Much Trouble

*-Betty*



ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் – சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ்,அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம் ஆனால் ஒருவருடைய வேலைஸ்தலத்திற்கு செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டுமென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தமக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் – நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடிவந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங் களையும் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியகத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத்திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், ‘‘நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்’’ எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்ளுகின்றனர். ‘‘ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளைசெய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஒய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது’’ என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள் தாங்கள் ஆஜராகாத காரணத்திற்கு ‘‘பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது’’எனக்கூறி சபை ஊழியரை குற்றப்படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை– நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையா? அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில் கலந்துகொள்ளுவேன், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது! தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி ‘‘வாருங்கள்

என்னைப்பின்பற்றுங்கள்'' என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக் கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33ல் அவர் ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்'' என்றார்.

அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு அவசியமானது என நாம் எவ்விதமான ''சிரமம்'' அல்லது 'அசௌரிகம்' அல்லது ''செலவு'' போன்றவை அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, ''சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்'' என விளக்குகிறது.

''சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்''.

''மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்''

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

**தேவனை ஆராதிக்க.** எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது, ''நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்,பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்''.

**கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர.** அப்போஸ்தலர்20:7ல், பவுல் சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது; ''வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்''.

**கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ள.** ''....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு''(2தீமோ.2:15). ஏன்?

ஏனென்றால், ‘‘வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது’’(2தீமோ.3:16,17).

**ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலனைப் பெற்றுக் கொள்ள,** ‘‘ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்’’(மத்,18:20). எபிரெயர்10:24ன்படி நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களாயிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப்போமானால், நாம் எவ்வாறு சகோதரரை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையை, தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என வெகு காலத்திற்கு முன்னே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினாவைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகின்றான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கியிருப்பீர்களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவுபெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறை வேற்றப்பட்டதாயிருக்கிறது.

**"உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்;" – சங்கீதம் 143:10**

ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

23



## பரிசுத்த வேதாகமத்தில் யோசுவா
## Joshua In The Holy Bible

1. நூனின் குமாரன் எப்பிராயீம் கோத்திரத்தான் மறுபெயர் ஓசேயா (எண்.13:8) - யோசு.1:1
2. மோசே அவனுக்கு பின்பாக இஸ்ரவேலை வழி நடத்த யோசுவை தெரிந்துகொள்ளுதல் - எண்.27:22
3. யோர்தானின் தண்ணீர் உள்ளங்கால் பட்டமாத்திரத்தில் தண்ணீர் நிற்கும் என்றான் - யோசு.3:13
4. இஸ்ரவேலர் யோசுவாவுக்குப் பயந்திருந்தார்கள் - யோசு.4:14
5. 6 நாள் எரிகோவை சுற்றிவந்து 7ம் நாள் ஏழு முறை சுற்றிவந்தார்கள் - யோசு.6:15
6. ஆயி பட்டணத்து தோல்விக்கு காரணமான ஆகானை அப்புறப்படுத்துதல் - யோசு.7:25
7. யோசுவாவின் சொல் கேட்டு சூரியன், சந்திரன் நின்றது - யோசு.10:12
8. கில்கால் என்ற ஸ்தலம் உருவாகக் காரணம் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்தான் - யோசு.5:4-9
9. நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம் - யோசு.24:15
10. 110 வயதுள்ளவனாக மரித்தான் - யோசு.24:29

### இந்தப் பாடத்திற்கான கேள்வி:

**யோசுவா; எந்தப் பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டிருக்கக் கடவன் என்று சாபம் கூறினான்?**

**விடை:** எரிகோ - "இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டிருக்கக்கடவன்" என்றான் (யோசு.6:26)



பு.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

**Bible Characters**

24



## பரிசுத்த வேதாகமத்தில் பிறவிக்குருடன்
## A Man of Born Blind In The Holy Bible

1. பிறவிக்குருடன் இவனுடைய பெயர் சொல்லப்படவில்லை - யோவா.9:1
2. இயேசு: தேவனுடைய கிரியை வெளிப்படும்படி இப்படிப்பிறந்தான் என்றார் - யோவா.9:2
3. இயேசு தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி இவன் கண்களில் பூசினார் - யோவா.9:6
4. உன் கண்கள் எப்படிதிறக்கப்பட்டது என்றார்கள் - யோவா.9:10
5. பரிசேயரில் சிலர் அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளவில்லை என்ற குற்றசாட்டு - யோவா.9:14
6. அவனை நோக்கி: நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அவர் தீர்க்கதரிசி என்றான் - யோவா.9:17
7. அவனுடைய தாய் தகப்பன் யூதருக்கு பயந்தார்கள் - யோவா.9:18
8. அவருக்கு சீஷராக மனதுண்டோ என்றான் - யோவா.9:26
9. அவனுடைய போதனை: உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே... என்றான் - யோவா.9:32
10. அவன் பார்வையடைந்த பின்பு இயேசுவைக் கண்டு அவரைப் பணிந்துகொண்டான் - யோவா.9:38

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***இந்தக் குருடனுடைய பெயர் பர்திமேயுவா?***

**விடை:** இல்லை - ..."அவரும் அவருடைய சீஷர்களும் திராளாக ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்;" (மாற்.10:45)



# ஜெபியுங்கள்



- இம்மாதம் நடைபெறவுள்ள கூட்டத்திற்காகவும், ஊழியக்காரர்கள் ஒருமனப்படவும்...
- கர்த்தருடைய பிள்ளைகள் நம் தேசத்தில் வளர்ந்து பெருக...
- இந்தியாவின் சுதந்தரம் பாதுகாக்கப்படவும், சுவிசேஷம் தடையில்லாமல் பிரசங்கிக்கப்படவும்...
- உலக அமைதிக்காக...
- மாறிவரும் சுற்றுசூழலிருந்து ஜனங்கள் பாதுகாக்கப்பட...

*"இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும்; மனுஷனுடைய உதவி விருதா" – சங்கீதம் 108:12*

## நான் யார்?

## Who Am I?



- நான் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவன்
- என்னுடைய மறுபெயர் 'யெருபாகால்'
- நான் ஒரு பராக்கிரமசாலி
- என் தகப்பன் வீட்டில் எல்லாரிலும் சிறியவன்
- நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய் கண்டேன்
- பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போட்டேன்
- முந்நூறு பேராலே மீதியானிரை ஜெயித்தேன்


'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**



பெண்கள் பகுதி

# உடன்படிக்கைகள் – Covenants

*-Glory Arjunan*

**–சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**புதிய உடன்படிக்கை:** இந்த உடன்படிக்கை விசேஷித்த உடன்படிக்கை. இதற்கு மத்தியஸ்தர் இயேசு கிறிஸ்து. "இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே" என்று வேதம் சொல்லுகிறது (எபி.8:6,7). கவனிப்போம்! "முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால்..." என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் அதில் பிழையிருந்துள்ளது. முற்பிதாக்களுக்குக் (இஸ்ரவேலருக்கு) கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை அவர்களால் பூரணமாகக் கைக்கொள்ள முடியவில்லை, உடன்படிக்கையை மீறினார்கள், எனவே இரண்டாம் உடன்படிக்கைக்கு (புதிய உடன்படிக்கைக்கு) இடம் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று தானே பொருள். எனவே எபிரெயர் 8:13ல் வாசிக்கிறபடி; "புதுஉடன்படிக்கை என்று அவர் சொல்லுகிற தினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது" என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. எரேமியா தீர்க்கதரிசியும் "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தாடும் யூதா குடும்பத்தோடும் புதுஉடன்படிக்கை பண்ணுவேன்" (எரே.31:31) என்று உரைத்திருக்கிறார். இப்படி பழைய ஏற்பாடு முழுவதும் இயேசுவைக்குறித்தும் அவரால் ஏற்படப்போகிற புதிய உடன்படிக்கையைக்குறித்தும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது.


மேலும் எபிரெயர்10:9 ஐ வாசிக்கும்போது "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் (இயேசு) என்று சொன்னார். இரண்டாவதை (புதிய உடன் படிக்கையை) நிலைநிறுத்த முதலாவதை (பழைய உடன்படிக்கையை) நீக்கிப்போடு கிறார்" என்று வாசிக்கிறோம் (எபி.10:7, சங்.40:6–8). அப்படியானால் பழைய ஏற்பாட்டு புத்தகத்தை வாசிக்கக் கூடாதா? அதைப் பின்பற்றக்கூடாதா? அதினால் எந்த பிரயோஜனமும் இல்லையா? என நீங்கள் கேள்வி எழுப்பலாம். பழைய ஏற்பாடு மிக மிக முக்கியமானது. தேவ ஆவியினால் ஏவப்பட்டு தேவனுடைய மனுஷர்களால் இரண்டு ஏற்பாடுகளும் எழுதப்பட்டுள்ளது. பழைய ஏற்பாடு மிக முக்கியமாக, உலகம் உண்டான வரலாற்றினை பிழையின்றி, கட்டுக்கதைகளுக்கு இடமில்லாமல், துல்லியமான (Historically Accurate) சொல்லுகிற ஒரு புத்தகம். இது இன்று நம்மெல்லோரையும் கிறிஸ்துவினிடத்திற்கு அழைத்துச் செல்லுகிற ஆசிரியராக இருக்கிறது. "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருக்கிறது" (கலா.3:24) என்று வேதம் சொல்லுகிறது.

ஆம், நாமெல்லாரும் ஆதாமின் பாவத்தின் கீழ் அடைக்கப்பட்டவர்களாக, பாவத்திற்கு அடிமையானவர்களாக, தேவனற்றவர்களாக, அந்நியராக, தேவனுடைய சொந்த சம்பத்தை இழந்தவர்களாக, நம்பிக்கையற்றவர்களாகப்போனோம். எனவே நாம் நீதிமான்களாக்கப்படுவது அவசியமாயிருந்தது. இதையே பேதுரு இவ்விதமாக "உங்கள்

முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக் கிறீர்களே. அவர் (இயேசு) உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசி காலங்களில் வெளிப்பட்டார்" (1பேது.1:18–20) என்றான். பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் ஒவ்வொருவரையும் பாவத்தினின்று விடுதலையாக்கி, பரிசுத்தப்படுத்தவே இயேசு வெளிப்பட்டார். இவர் யூதர்களுக்கு மட்டுமல்ல, உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் பாவத்திலிருந்து விடுதலையைக் கொடுக்க வந்த பரித்தர். இயேசுவின் பிறப்பின் செய்தி, "...இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி... என்று அறிவிக்கப்பட்டது (லூக்.2:10). அவருடைய மரணமும், அவர் சிந்தின இரத்தமும் நம்மை பாவமற கழுவிசுத்திகரிக்கிறது. "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே.2:5) என வேதம் கூறுகிறது. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். "சட்டதிட்டங் களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து... தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (எபே.2:13–16). இப்படியான கிறிஸ்து விசேஷ வாக்குத்தத்தங்கள் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருந்து நம்மை தேவனோடு ஒப்புரவாக்கினார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறினோம்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களைக் கழுவி, தேவனோடு இணைத்திருப்பதினால் வாரத்தின் முதல் நாள் தோறும் அவருடைய மரணத்தை நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கிறோம். இதுவே அவருடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (1கொரி.11:23–25) என வேதம் கூறுகிறது. எனவே தான் கிறிஸ்துவின் சபையார் புதிய உடன்படிக்கையைப் பின்பற்றுவதற்கு அடையாளமாகவும், இயேசுவை நினைவுகூரும்படிக்கும் "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்,... " (அப்.20:7) என்ற வசனத்திற்கேற்ப வாரத்தின் முதல் நாளிலே அப்பம்பிட்டு புதிய உடன்படிக்கையைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள்.

அன்பு சகோதரிகளே, இச்செய்தியை தயவுசெய்து கவனமாகப் படியுங்கள். பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளுங்கள். பிசாசின் உபதேசங்களுக்குச் செவிசாய்க்காமல் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிசாய்த்து, அதிலே நிலைத்திருங்கள். பிதாவையும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் உடைய கிறிஸ்தவர்களாக இருங்கள் (2யோவா.9). தேவன் தாமே உங்களை வழிநடத்துவாராக. ஆமென்.



# அவருடைய சந்நிதானத்தில் சமாதானம்
# Peace in His Presence

*- Benny Martin*

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக சமாதானம் இருந்தும் அது பலரிடம் இல்லாமலிருப்பது எல்லையில்லா தொல்லைக்கு வழிவகுத்துவிடுகிறது. இந்த சமாதானத் திற்காக உலகிலுள்ள ஏராளமானோர் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். உலகின் பல நாடுகளில் சமாதானம் என்னும் வார்த்தையைத் தான் வாழ்த்துக்களாகவும், வந்தனங்களாகவும் பரிமாறிக்கொள்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஈராயிரம் வருடங்களுக்கு முன்பாக நம் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிறந்த இஸ்ரவேல் தேசத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் போது சமாதானம் எனும் பொருள் கொண்ட **ஷாலோம்** என்னும் எபிரெய வார்த்தை பரவலாக பயன்படுத்தப்படுகிறது. காரியங்கள் அசுர வேகத்தில் அரங்கேறிவரும் இந்த அவசரமான உலகில் ஒரு சராசரி மனிதனுக்கு சமாதானம் சரளமாக கிடைப்பதில்லை. உலகச் சந்தையில் சமாதானம் என்பது தடையில்லலாமல் கிடைக்கும் கடைச்சரக்கல்ல. அப்படியிருந்திருந்தால் நுகர்வு கலாச்சாரத்தில் முகர்ந்து பார்ப்பதை எல்லாம் முயற்சிக்க நினைக்கும் செல்வச் செருக்குள் ளவர்களிடத்தில் இந்த சமாதானம் சமரீதியாக இருந்திருக்கும். இன்றைய தேதியில் உலகில் எத்தனை சதவீதமக்கள் சமாதானமாக இருக்கிறார்கள் என்று ஆய்வு மேற்கொண்டால், மிகவும் குறைவான சதவீதத்தினரே சமாதானமாக இருப்பதாக காணமுடியும்.

நாம் பொருவான அர்த்ததில் பார்த்தால் சமாதானம் என்பது சண்டை, சச்சரவு இல்லா நிலையையே குறிக்கிறது. ஆனால், இது உள்ளத்தின் ஆழத்தில் உருவாகும் ஓர் உன்னதமான உணர்வாகும். வாழ்கைப் புயலால் புரட்டி போடப்பட்டிருக்கும் பலர் புனரமைக்கப்பட புருவங்களை உயர்த்தி இந்த சமாதானத்திற்காகத்தான் சதா காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சமாதானம் என்பது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக கொடுக்கும் ஈவாகத்தான் இருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கத்துக்கும், சமாதானத்திற்கும் இடையே நெடிய நெருங்கிய தொடர்பு உண்டு. நம் தேவன் சமாதானத்தின் தேவனாக வேத வாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறார் (1தெச.5:23). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாதானப் பிரபு என்றழைக்கப்படுகிறார். பரிசுத்த ஆவியின் கனிகளுள் ஒன்றாக, இந்த சமாதானம் இருக்கிறது. இத்தனையிருந்தும் சமாதானத்தின் தேவனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் சமாதானத்தை முழுமையான அளவில் அனுபவிக்கிறார்களா? அல்லது அரைகுறையாக அனுபவிக்கிறார்களா? சமாதானத்திற்கு சவாலாக இருக்கும் காரியங்கள் என்னென்ன? போன்ற கேள்விக்கு வேதத்தின் வெளிச்சத்தில் விடைதேட விழைவோம்.

**1. சமாதானத்தின் ஆதாரம்:** சமாதானம் என்பது அநேகரால் ஆசைப்பட்டும் அரிதாக கிடைக்கும் ஒன்றாக இருக்கிறபடியால் அதன் ஆதாரத்தை அறிவது அவசியமாயிருக்கிறது. சமாதானத்தின் ஆதாரம் மற்றும் அதை தாராளமாகத் தரக்கூடியவர் கிறிஸ்துதான். சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூலோகில் பிறந்த போது தேவ தூதர்கள் உன்னத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள் (லூக்.2:14). இவ்வுலகில் சமாதானத்திற்கு பலவிதமான விளக்கமும், வியாக்கியானமும் கொடுக்கப்பட்டாலும் கூட உண்மையான சமாதானம் அவரிடமிருந்தே ஊற்றெடுத்து வருகிறது. உலகத்தால் தர முடியாத உண்மையான சமாதானத்தை அவரால் மாத்திரமே தர முடியும். இன்று உலகில் பலர் பொய் சமாதானத்தை பொன்னையும், பொருளையும் கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து யோவா.14:27ல் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக என்று சொன்னார்.

உலக சரித்திரத்தை கி.மு.மற்றும் கி.பி என்று இரண்டாகப் பிரித்த நம் இரட்சகர் சமாதானத்தையும் இரண்டாகப் பிரிக்கிறார். ஒன்று அவர் தருகிற சமாதானம், இன்னொன்று உலகம் தருகிற சமாதானம். இவ்வுலகில் பலர் வாழ்க்கையில் புதிய உயரங்களைத் தொட்டால், நினைத்த காரியங்கள் நிறைவேறினால், சண்டை சச்சரவற்ற நிலை நீடித்தால் தாங்கள் சமாதானமாக இருப்பதாக சொல்கிறார்கள். உள்ளபடி பார்த்தால் உலகம் தரும் சமாதானம் சமகால நிலவரப்படி சில நிமிடங்களுக்கே தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்டுள்ளது. பாடுகள் நிறைந்த பாழாய்ப்போன இவ்வுலகத்தால் சமாதானத்தை சம்பூரணமாகத் தரவே முடியாது. இவ்வுலகில் சமாதானத்தைத் தேடி அலைவது காற்றைப்பிடிக்க முயற்சிப்பது போன்றதாகும். மெய் சிலிர்க்க வைக்கும் மெய் சமாதானத்தின் ஆதாரமாக கிறிஸ்து இருப்பதால் நாம் கிறிஸ்துவுக்குள் வேரூன்றி, விசுவாசத்தில் விருத்தியடைந்து அவரைச் சார்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் பூரணமான சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவியின்படி நடந்து ஆவியின் கனிகளைக் கொடுப்பது நமக்கான கடமையாகவும், கட்டளையாகவும் இருக்கிறது. சமாதானம் என்பது ஆவியின் கனிகளுள் ஒன்று என்பதை மறந்துவிட வேண்டாம் (கலா.5:22,23).

நாம் ஆரம்பத்தில் **ஷாலோம்** என்னும் எபிரெய வார்த்தை சமாதானத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று பார்த்தோம். புதிய ஏற்பாட்டில் **ஐரீன்** (Eirene) என்னும் கிரேக்க வார்த்தை சமாதானத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வார்த்தை தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு கிறிஸ்தவனுடைய உள்ளான மனதில் நிலவும் சலனமற்ற நிலையை நினைவுபடுத்துகிறது. (சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும்) இத்தகைய மகத்துவமுள்ள சமாதானம் எல்லோருக்கும் கிடைக்கிறதா என்றால் இல்லை. ஏசா.48:22ல் துன்மார்க்கனுக்கு சமாதானம் இல்லையென்று பார்க்கிறோம். பெரும்பாலான நேரங்களில் நம் சமாதானக் குறைவுக்கு நம் பாவங்களே காரணங்களாக அமைந்து விடுகின்றன. நாம் மாம்சத்தின் கிரியைகளை வெளிப்படுத்தும்போது நட்பில், குடும்பத்தில், சபையில், சமுதாயத்தில் சமாதானக் குறைவை ஏற்படுத்திவிடுகிறது. தேவனுடைய காரியங்களை நாம் முதன்மைபடுத்த மறக்கும்போது அல்லது மறுக்கும்போது நாம் சமாதானத்தை தொலைத்து விடுகிறோம். இவைகள் நம் சமாதான கனவை கலைத்துவிடுகின்றன (லூக்.8:14). பல வேளைகளில் பண ஆசை சமாதானத்தை நோக்கிய நம் பயணத்தை பதம் பார்த்து விடுகிறது (1தீமோ.6:10). பலர் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் எனும் சமாதானத்திற்கான தாரக மந்திரத்தை மறந்துவிட்டு மனம் போன போக்கில் போகிறபடியால் சமாதானம் அவர்கள் வாழ்வில் மங்கிப்போகிறது.

பிரியமானவர்களே, சமாதானம் எனும் வார்த்தை இவ்வுலகில் பலரின் பேசும்பொருளாகவும் ஆசுவாசத்தை அளிக்கும் அருமருந்தாகவும் அமைந்திருக்கிறபடியால் அனைவருக்கும் இதன் மீது கவனமும் கவர்ச்சியும் இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. எல்லோருக்கும் சமாதானமாக இவ்வுலகில் வாழ வேண்டுமென்று ஆசை இருப்பதிலும் ஆச்சரியமில்லை. ஆனால் சமாதானம் இல்லை இல்லை என்று புலம்புவதைவிட அதைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை அறிந்து வெற்றி வாழ்க்கையை வாழ வேண்டும். சமாதானம் நம்மைத்தேடி வருமென்று காத்திருக்காமல் அதைத் தேடி, அதைத் தொடரவேண்டும் (சங்.34:14). உலகம் தருகிற சமாதானம் நமக்குத் தேவையில்லை. காரணம் அவை நீடித்து நிலைப்பதில்லை. இன்றைய நாட்களில் நமக்குத் தேவை பூரணமான சமாதானம் அதை நமக்கு சமாதானத்தின் தேவனும், சமாதானப் பிரபுவும் மாத்திரமே தர முடியும்.

ஏசாயா சொல்லுகிறபடி; "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன், உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" என்று ஏசா.26:3ம் வசனத்தின்படி உங்களுக்கு பூரண சமாதானத்தை கட்டளையிடுவாராக!

# தமிழக கிறிஸ்துவின் சபை
# ஊழியர்களுக்கான சிறப்புக்கூட்டம்

**நாள்:** 18.08.2023 வெள்ளிக் கிழமை

**நேரம்:** காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

**இடம்:** வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்

நோக்கம்:
- ஊழியர்களை ஊக்கப்படுத்துதல்
- நாற்பது வயது நிறம்பியவருக்கு மருத்துவத்திற்கு உதவி
- அவரவருடைய முகவரியுடன் கைபிரதிகள் அச்சிட்டு கொடுப்பது
- சபை வளர்ச்சிக்கான ஆவிக்குரிய ஆலோசனை வழங்குதல்
- சட்ட ஆலோசனை வழங்குதல்

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" - இயேசு (யோவான் 13:35)**

**குறிப்பு:** 1. இக்கூட்டத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ள கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் ஆகஸ்ட் 17ம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

2. மருத்துவத்திற்கு உதவி தேவைப்படுவோர் மட்டும் கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களைக் கொண்டுவரவும்.

- நீங்கள் வேதாகம பள்ளியில் படித்தற்கான சான்று
- உங்களுடைய இருப்பிட முகவரிக்கான சான்று
- உங்களுடைய சபையாரின் பரிந்துரை கடிதம்

**வாருங்கள் தமிழகத்தில் கிறிஸ்துவின் சபை**
**வளர்ச்சியடைய**
**ஒருமனப்பட்டு ஜெபித்து**
**நம் ஆண்டவர் இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம்**

**சகல தொடர்புக்கும்:**
**சகோ.அர்ஜுனன், ஊழியர்**
**கிறிஸ்துவின் சபை, வத்தலக்குண்டு**
**9443558041 மற்றும் 6379350509**

**இக்கூட்டங்களுக்கு உதவிசெய்வோர்**
**வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார்**

## கர்த்தருடைய சபை

- ஜனங்கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்று அதன் மூலம் தங்களுடைய பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள் (மாற்.16:16, அப்.2:38)
- கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப்.2:47)
- பிராந்திய சபைகளில் ஒன்று கூடினார்கள் மேலும்
  - வாரத்தின் முதல் நாளிலே பாட்டுகளைப் பாடி, ஜெபித்து, வரவுக்குத் தகுந்த காணிக்கையினை செலுத்தி, சுவிசேஷத்தினை போதித்து, கர்த்தருடைய இராபோஜனத்தில் பங்கு பெற்றார்கள் (அப்.2:42, 1கொரி.11;24-25; 20:7, 1கொரி.16:1,2)
  - இழந்து போனவர்களுக்குப் போதித்து, தேவையிலுள்ள பரிசுத்தவான்களைப் பராமரித்து, ஒருவருக்கொருவர் போதித்தார்கள் (எபே.4:14, அப்.6:1-7, 1கொரி.14:26)
  - தங்களை கிறிஸ்துவின் சபையார் என அழைத்தனர் (ரோம.16:16)

## The Lord`s Church

- Peole believed & were baptized and by very fact saved from their sins (Mk.16:16; Acts 2:38)
- Added to the Lord`s Church (Acts 2:47)
- Gathered together in local Churches and:
  - sang, prayed gave as prospered, taught the Gospel, and partook of the Lord`s Supper on the 1st day of each week (Acts 2:42, 1Cor.11:24,25; 20:7; 1Cor.16:1,2)
  - Taught the lost cared for needy saints, and edified one another (Eph.4:14;Acts 6:1-7; 1Cor.14:26)
  - Called themselves Churches of Christ (Rom.16:16)

**The Simplicity of the New Testament Church**

**இது புதிய ஏற்பாட்டு சபையின் எளிமை**





# யார் பிழைப்பான்?

## Who Will Live?

*R.Immanuelraj*

**இ**ந்த உலகத்தில் மனிதன் பிழைப்பதற்காக, வாழ்வதற்காக, உயர்வதற்காக பிரயாசப்படுகிறான். இதற்காக இரவு பகல் பாராது உழைக்கிறான். கஷ்டப்பட்டு வேலைசெய்கிறான் ஆனாலும் அவனுடைய வாழ்வு நிறைவாக இல்லை. பரிசுத்த வேதாகமத்தில் ஆண்டவர் இயேசு சொல்லியிருக்கிறார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றார்" (யோவான்11:25). இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கும்போது அவரால் நிச்சயமாக பிழைப்பீர்கள். மேலும், "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது.

மனிதன் இந்த உலகத்தில் வாழ்வதற்கு உண்ணவும் உடுக்கவும் உண்டாயிருந்தால் அது போதும். ஆனால் மனிதனுக்கு அவைகள் நிறைவாக இருப்பதில்லை. எனவே தன் கண்களுக்குப்பிரியமானவைகளை சம்பாதிக்கவும், சந்தோஷமாக இருக்கவும் ஒவ்வொரு நாளும் பிரயாசப்படுகிறான். அதன் முடிவு மாயையாகவும் அவனுடைய மனதுக்கு அது சஞ்சலத்தையும் கொண்டுவருகிறது. அவனுடைய ஆத்துமாவிற்கு, சம்பாத்தியமோ அல்லது பொருட்களோ வாழ்க்கையில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டுவராது; தேவனுடைய வசனம் ஒவ்வொருவருக்கும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவரும். இவைகளை முதலாவது தேடுங்கள்.

வேதம் சொல்கிறது: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு6:33). இந்த உலகத்தில் உங்களுடைய பிழைப்புக்கடுத்த அலுவலில் சிக்கிக்கொள்ளாமல் முதலாவது தேடவேண்டிய அவருடைய ராஜ்யமாகிய சபையையும் அவருடைய நீதிபோதனைகள் அடங்கிய கர்த்தருடைய வசனத்தையும் தேடுங்கள்.

பவுல் சொல்லுகிறார்: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்கிறார். இந்த நம்பிக்கையில் பிழைத்திருக்கிறவர்கள். தேவனுக்கென்று பிழைத்தவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீண்போகாது. இப்பிரதியை வாசிக்கும் அன்பு தேவஜனமே, நாம் வாழ படைக்கப்பட்டோம். இவ்வுலக வாழ்க்கையானது அற்புதமானது. அதை அனுபவிக்க ஆண்டவர் இயேசுவின் சத்தம்கேளுங்கள். அவருக்குள்ளாக இருப்பவர்கள் மேய்ப்பனின் சத்தம்கேட்கும் ஆடுகளைப்போல உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகிறார்கள். நீங்கள் சாதிக்கவேண்டிய அநேக காரியங்கள் உண்டு. நீங்கள் அவருக்குள் பிழைக்கும்போது அவைகளை நிறைவேற்ற முடியும். கர்த்தருக்காக வாழுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

சிறுவர் பகுதி

# தங்களைத் தீட்டுப்படுத்தாதபடி பாதுகாத்துக்கொண்ட நான்குபேர்

வேத பகுதி: தானியேல் 1:1–21



நேபுகாத் நேச்சார் என்ற ராஜா இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டடையிட்டான்.

அவர்களுக்குள்ளே யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு மற்றொரு பெயர், பெல்தெஷாத்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ. தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். ஆகையால் தானியேல் பிரதானிகளின் தலைவனை நோக்கி பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். அந்தப்படியே சோதித்துப்பார்த்தபோது இவர்களுடைய சரீரம் புஷ்டியுள்ளதாக இருந்தது. மேலும் ராஜசமூகத்தில் நிற்கும்போது ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

அன்பான தம்பி தங்கைகளே, நீங்களும் வருங்காலங்களில் இந்த நான்குபேரைப்போல உங்களை தீட்டுப்படுத்தாது பாதுகாத்துக் கொள்வீர்கள் என்றால் உங்களுக்கும் தேவன் ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவார்.

**மனப்பாட வசனம்**

**“கர்த்தர் ஞானத்தை தருகிறார்;**
**அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்” நீதிமொழிகள் 2:6**


## வேத அறிவுப் போட்டி எண்: 276

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அவர்கள் வாய்க்கு உம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தீர் என யாருடைய நடபடிகளில் வாசிக்கிறோம்?
2. தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்கிறோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. எவனுடைய மனைவியாகிய சிரேஷும் அவனுடைய சிநேகிதர் எல்லாரும் ஐம்பது முழ உயரமான தூக்குமரம் செய்யப்படவேண்டுமென்றார்கள்?
4. இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல என பவுல் எந்த நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறார்?
5. பெரியோரெல்லாம் ஞானிகளல்ல; முதியோரெல்லாம் நீதியை அறிந்தவர்களுமல்ல என்றவன் யார்?
6. உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் என்ன செய்யக்கடவன்?
7. யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் என்ன செய்கிறார்?
8. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. பாவிகளை எவை தொடரும்; நீதிமான்களுக்கோ எவை பலனாக வரும்?
10. இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்ட பின்பு இது லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள் என்று பவுல் எந்த சபைக்கு எழுதினார்?

## வேதாகம ஆய்வு... 60 சிதேக்கியா – zedekiah



1. யூதாவின் கடைசி ராஜா
2. இவனுடைய முதற் பெயர் மத்தனியா – 2இரா.24:17
3. இவனுடைய குமாரரை இவன் கண் முன்னே வெட்டினார்கள் – எரே.39:6
4. இவனுடைய சிறிய தகப்பன் இவனை இராஜாவாக்கினான் – 2 நாளா.36:10
5. இவனுடைய கண்களை குருடாக்கி பாபிலோனுக்கு கொண்டுபோனார்கள் – 2 இரா.25:7

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
August 2023

திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை வளாகத்தில் உள்ள
சிற்றாலயத்தில்
நடைபெற்ற 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' கூட்டம்






"உலகமெங்கும் போய்,
சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"
மாற்கு 16:15

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

எமது புதிய
வெளியீடு
இன்றே வாங்கி
பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan